# "<u>தகவல் வழிகாட்டி</u>" <u>நூல் வெளியீடு!</u>

சுவாமி விவேகானந்தா யோகா & ஸ்கேட்டிங் கழகத்தின் மாநில தலைவர் கே.வி. துரை தொகுத்து உருவாக்கிய தகவல் அறியும் உரிமை சட்டம் உள்ளடக்கி மற்றும் பல முக்கிய தகவல்களையும் கொண்ட "தகவல் வழிகாட்டி" எனும் நூல் வெளியிடப்பட்டது. சென்னையிலும், மதுரையிலும் இருவேறு நிகழ்ச்சிகளாக நடைபெற்ற "தகவல் வழிகாட்டி" புத்தகத்தை சென்னையில் தமிழக தலைமைத் தேர்தல் ஆணையர் சோ. அய்யர் வெளியிட சுவாமி விவேகானந்தா யோகா & ஸ்கேட்டிங் கழகத்தின் நிறுவனர் எஸ். சுரேஷ் குமார் பெற்றுகொண்டார். மதுரையில் விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்க தாகூர் வெளியிட இந்திய அரசின் நேரு யுவகேந்திரா மாநில இயக்குனர் சடாச்சரவேல் பெற்றுகொண்டார். "தகவல் வழிகாட்டி" எனும் அருமையான நூலை தொகுத்திட்ட கே.வி. துரை'யை திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் என்.எஸ்.வி. சித்தன் மற்றும் இந்திய அரசின் நேரு யுவகேந்திராவின் மதுரை மாவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பாளர் கே. ஜவஹர் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர்.